ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
கொலைகார
குள்ளன்
ரூ. 2

விவேகம் சேர்த்து வெற்றியாக்கு!

–கவிஞர். ரெங்கநாதன்

கடலைப் பார்த்து பயந்து நின்றாய்;
குளிக்க நீயும் மறந்துவிட்டாய்!
கடலில் நீந்த பயந்து நின்றாய்;
கரையில் தனியாய் ஒதுங்கி நின்றாய்!

புதுமைப் படைக்க விருப்பம் கொண்டாய்;
பழமைத் துடைக்க மறந்துவிட்டாய்!
புதையல் எடுக்க முடிவு செய்தாய்;
,புதரைப் பார்த்து ஒதுங்கி நின்றாய்!

முயன்று பார்த்தால் முடியாதுண்டோ?
முடங்கிக் கிடந்தால் வெற்றியுண்டோ?
பயின்று பார்த்தால் புரியாதுண்டோ?
பள்ளி மறந்தால் மதிப்புமுண்டோ?

தீரம்காட்ட முனைப்புக் கொண்டு
தேர்ந்த பணியை முடித்துவிடு!
வீரம்கொண்டு பயணம் ஆற்று;
விவேகம் சேர்த்து வெற்றியாக்கு!

கோடைமலர்!

அடுத்த "ராணிகாமிக்ஸ்" (மே 1-ந்தேதி) இதழ் கோடை மலராக வெளிவருகிறது!

மாணவ- மாணவிகள் கோடை விடுமுறையைக் குதூகலமாகக் கழிக்க வேடிக்கை விநோத செய்திகள், துணுக்குகள், விளையாட்டு கணக்குகள், பரிசு போட்டிகள் போன்றவை கோடைமலரில் இடம் பெறுகின்றன.

80 பக்கம்! ஆனால், விலை ரூ. 2 தான்!

உங்கள் உள்ளங்கவர்ந்த லேடி ஜேம்ஸ்பாண்டு மாடஸ்தி தோன்றும் விறுவிறுப்பான மர்மப் படக்கதை இந்தக் கோடை மலரில் இடம்பெறுகிறது!

இப்பொழுதே உங்கள் பிரதிக்கு கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்!

ராணி காமிக்ஸ்-236 ஏப்ரல் 16-30
(மாதம் இருமுறை இதழ்) 1994

Tex Sampath Tirupur

முகமூடிவீரர்

மாயாவி

தோன்றும்

கொலைகாரக் குள்ளன்

முன்னொரு காலத்தில் வியாபாரிகள் நாடுவிட்டு நாடுவந்து வியாபாரம் செய்ய வேண்டும் என்றால் காட்டுப்பாதை வழியாகத் தான் அடுத்த நாட்டுக்குச் செல்வார்கள். அப்படித்தான் நாண்கைந்து வியாபாரிகள் பொருட்களை கழுதையில் ஏற்றிக்கொண்டு
பெங்காலியாவிற்குச் செல்ல காட்டுப்பாதை வழியாக வந்து கொண்டிருந்தார்கள்.
நாம் கழுகுமுனைக்கு வந்துவிட்டோம்! இனி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!
ஏன்?
சிறிது தூரத்தில் சிங்கம் ஒன்று இறந்து கிடந்தது.
ஆ...! சிங்கம்!
சிங்கத்தைப் பார்த்து வியாபாரிகள் அதிர்ச்சி அடைந்தார்கள்.
சிங்கம் எலும்பு நொறுங்கி செத்துக் கிடக்கிறது?
எப்படி?
மரம் அல்லது பாறை ஏதாவது உருண்டு விழுந்து நசுக்கியிருக்கும்!

மரமோ, பாறையோ எப்படி சரியாக விழும்?
யாரோ பாறையை உருட்டி விட்டிருக்க வேண்டும்!
யாராக இருக்கும்?
கழுகு முனையில் அரக்கன் இருப்பதாக கேள்விப்பட்டிருக்கோமே அவன் சிங்கத்தை கொன்றிருப்பானா?
ஆமாம்! அந்த அரக்கன்தான் சிங்கத்தை கொன்றிருப்பான்!
சாதாரண மனிதனால் சிங்கத்தை கொல்ல முடியாது!
என்னால் இதை நம்ப முடியவில்லை!
ஆ...! என்ன சத்தம் இது?
திடீரென்று இடிமுழக்கம் போல் சத்தம் கேட்டது.
...

ஏய்...! இது எனக்குச் சொந்தமான இடம். மரியாதையாக கையில் இருக்கும் பணத்தை கொடுங்கள்!
ஒரு முரட்டுக் குரல் எதிரொலித்தது!
மரியாதையாக பணத்தை கொடுக்கிறீர்களா? இல்லை உயிரை விடுகிறீர்களா?
பணம் அல்லது உயிர்?
திடீரென்று அவர்கள் முன் அரக்கன் தோன்றினான்.
அரக்கனைக் கண்டதும் வியாபாரிகள் வெலவெலத்துப் போனார்கள்.
இது எனக்குச் சொந்தமான இடம். மரியாதையாக 50 தங்க நாணயங்கள், உணவு, மது வகைகள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்!

ஏய்...! வாருங்கள் ஓடிவிடலாம்! விரட்டினால் சுட்டுத் தள்ளலாம்!
வேண்டாம்! ஓட வேண்டாம்!
வாருங்கள் ஓடிவிடலாம்!
இருங்கள்! அரக்கனை சுட்டுத் தள்ளிவிட்டு வருகிறேன்!
இல்லை! துப்பாக்கிக் குண்டுகள் அரக்கனை ஒன்றும் செய்யாது!
நீ தள்ளிப்போ! அதையும் பார்த்துவிடுவோம்!
என் கட்டளைக்கு அடிபணியுங்கள். இல்லாவிட்டால் தண்டிக்க நேரிடும்!
அரக்கனே! மரியாதையாக போய்விடு! இல்லை சுட்டுத்தள்ளி விடுவோம்!

வியாபாரிகள் அரக்கனை நோக்கி சரமாரியாக சுட்டார்கள்.
டுமீல்...! டுமீல்...! டுமீல்...!
என்ன ஆச்சரியம். துப்பாக்கிக் குண்டுகள் அரக்கன் மீது பட்டு தெறித்து விழுந்தன.
ஏய்...! துப்பாக்கி குண்டு அரக்கனை துளைக்க வில்லையே!
பொடியர்களே என்னைக் கொல்ல உங்களால் முடியாது! இப்பொழுது பார்!
அரக்கன் வியாபாரிகளை தாக்க தடியை ஓங்கினான்.
நிறுத்து!
திடீரென்று மரக்கிளையில் இருந்த குள்ளன் ஒருவன் குரல் கொடுத்துக்கொண்டே அரக்கன் தோளில் குதித்தான்.
முட்டாள் மனிதர்களே! அரக்கனை எச்சரிக்கலாமா? மரியாதையாக துப்பாக்கியை கீழே போடுங்கள்!
ஆ... விசித்திரக் குள்ளனாக இருக்கிறானே?
??

ஏய்! என்னை கீழே இறக்கிவிடு!.
குண்டுகள் அரக்கனை துளைக்க முடியாது! சிங்கத்திற்கு ஏற்பட்ட கதி ஏற்பட வேண்டுமா? பேசாமல் அவன் சொல்கிறபடி நடங்கள்!
குள்ளன் எடுத்துச் சொன்னான்.
துப்பாக்கியை கீழே போடாவிட்டால் அரக்கன் உங்களை கொன்றுவிடுவான்!
இதோ போட்டு விடுகிறோம்!
ஹா...ஹா... ஹா... அப்படி வாருங்கள் வழிக்கு...!
குள்ளன் பயங்கரமாக சிரித்துக்கொண்டே துப்பாக்கிகளை எடுத்தான்.
துப்பாக்கியை போட்டுவிட்டீர்கள். இனி 50 தங்க நாணயம், உணவு, மது, குண்டுகளை கொடுத்து விடுகிறீர்களா?
ஆ...! கொடுத்து விடுகிறோம்!

Tex Sampath Tirupur

வியாபாரிகள் சென்றதும் குள்ளன் குதூகலித்தான்.
ஹா...ஹா... ஹாஹா...! பாவம் அனைத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள்!
காட்டுக்குள் மண்டைஓட்டுக் குகையில் மாயாவி இருந்தார்.
கழுகு முனையில் அரக்கன் ஒருவன் வியாபாரிகளிடம் வழிப்பறி செய்கிறானாமே?
மாயாவிக்கு செய்தி எட்டியிருந்தது.
குரன்! கழுகு முனையிலா இப்படி வழிப்பறி நடக்கிறது!
ஆமாம் மாயாவி! ஒரு அரக்கனும், குள்ளன் ஒருவனும் கைவரிசையை காட்டுகிறார்கள். அரக்கன் ஒரு சிங்கத்தை நசுக்கி கொண்றிருக்கிறான்!
கழுகு முனை எங்கே இருக்கிறது!
கிழக்குப் பக்கத்தில் இருக்கிறது
அவன் குரல் பயங்கரமாக இருக்கிறதாம்?
ஆமாம்! அவனுக்கு சாவே இல்லையாம்?

கழுகு முனையில்—
சிங்கத்தை நசுக்கி சாகடித்திருக்கி றார்கள்!
பணம் கொடுக்கா விட்டால் உயிரோடு திரும்ப முடியாது!
துப்பாக்கிக் குண்டுகள் அரக்கனை துளைக்க வில்லையே?
பணம் கொடுக்கிறீர்களா? கொல்லட்டுமா?
நாங்கள் பணம் கொடுத்து விடுகிறோம்!
சந்தையில் வியாபாரிகள் அனைவரும் சந்தித்துப் பேசினார்கள்.
காட்டில் ஒரு அரக்கனும் குள்ளனும் சேர்ந்து எங்களை வழிமறித்து பணத்தை பறித்துக் கொண்டார்கள்!
ஆமாம்! என் முதலாளி அரக்கனை பார்த்திருக்கிறார்!

முதலாளி என்ன நானே நேரில் பார்த்கேன்!
அரக்கன் மரம் போல நெடுநெடுவென இருந்தான். துப்பாககிக் குண்டுகள் மழைத்துளி போல் அவன் மீது பட்டு விலகி விடுகின்றன!
அப்படியா?
அரக்கனையும் குள்ளனையும் பார்த்தீர்களா?
பார்த்தேன்! அரக்கன் என் பணத்தை எல்லாம் பறித்துக்கொண்டான்:
"நான் அவனை சுட்டேன். ஆனால், துப்பாக்கிக் குண்டுகள் அவன் மீது பட்டு தெறித்துவிடுகின்றது!"
இரண்டு நடையில் சம்பாதிக்க வேண்டிய பணத்தை ஒரு நடையில் அவனிடம் இழந்துவிட்டேன்!
வாருங்கள்! அவன் யார் என்று பார்த்து விடுவோம்!
அய்யோ! இனி அந்த வழியாக நான் வரவே, மாட்டேன்!

காட்டில் உள்ள ஓகான் கிராமத்தில்–
வியாபாரிகள் இப்பொழுதெல்லாம் இந்தப் பக்கம் வருவதில்லையே ஏன்?
அவர்கள் வராததினால் நமக்கு உப்பு, துணி கிடைப்பதில்லை!
நாம் இப் பொழுது என்ன செய்யலாம்!
தலைவர் தன் மகனை அழைத்தான்.
மகனே முஸ்தபா! நீ சந்தைக்குச் சென்று வியாபாரிகளை சந்தித்து ஏன் கிராமத்துப் பக்கும் வருவதில்லை என்று கேட்டு வா!
இப்பொழுதே புறப்படுகிறேன் தந்தையே!
உடனே முஸ்தபா சந்தைக்கு, கழுகு முனை வழியாக சென்றான்.
அவனை அரக்கனும் குள்ளனும் பார்த்தார்கள்.
முஸ்தபா பாய்ந்து சென்றுகொண்டிருந்தான்.
இவனை வழிமறித்தால் நமக்கு எதுவும் கிடைக்காது!
உண்மை! உண்மை!

முஸ்தபா சந்தைக்கு வந்து வியாபாரிகளை சந்தித்தான்.
நீ வரும்பொழுது காட்டில் அரக்கனையும் குள்ளனையும் பார்க்கவில்லையா?
அரக்கனா? குள்ளனா? யாரது?
நான் ஓகான் கிராமத் தலைவரின் மகன்! நீங்கள் ஏன் எங்கள் கிராமத்துக்கு வருவதில்லை!
இனி நாங்கள் கழுகு முனை வழியாக வரப்போவதில்லை!
நான் அந்த வழியாகத்தான் வந்தேன். அரக்கனையும் குள்ளனையும் பார்க்கவில்லையே?
நாங்கள் பார்த்தோமே! எங்கள் பணத்தை எல்லாம் அவன் கொள்ளையடித்து விட்டானே?
வாருங்கள்! நான் வேண்டுமானால் உங்களுடன் துணைக்கு வருகிறேன்!
என்ன சொன்னாலும் இனி நாங்கள் அந்தப் பக்கம் வருவதாக இல்லை!

மண்டைஓட்டுக் குகையில்–
குரான்! அரக்கனைப் பற்றி இப்பொழுது ஏதாவது செய்தி உண்டா?
இல்லை மாயாவி!
ரெக்சு! நாம் இன்றைக்கு ஈடன் தீவுக்குச் செல்லலாமா?
போகலாம் மாமா!
மாயாவியும்– ரெக்சும் ஈடன் தீவுக்கு புறப்பட்டார்கள்.
மாமா! போகும் வழியில் அந்த அரக்கனைப் பார்த்துவிட்டுச் செல்வோமே?
இல்லை ரெக்சு! அதெற்கெல்லாம் நேரம் இல்லை!
முஸ்தபா கிராமத்துக்கு திரும்பி வந்தான்.
தந்தையே! வியாபாரிகள் கழுகு முனையில் ஒரு அரக்கனைப் பார்த்து பயந்து இருக்கிறார்கள். அதனால் இந்த வழியாக வரப்போவ தில்லையாம்?
நான் அந்த அரக்கனைப் பற்றி கேள்விப் பட்டேன்

ஆனால் அது சுத்தப் பொய்! அப்படி யாரும் இல்லை! எதற்கும் நீ நம் ஆட்களுடன் சென்று பார்த்துவிட்டு வந்துவிடு!
முஸ்தபா தன் ஆட்களுடன் கழுகு முனைக்கு வந்தான். அங்கே சிங்கம் செத்துக் கிடப்பதைப் பார்த்து அதிர்ந்து போனார்கள்.
சிங்கத்தை யாரோ நசுக்கிக் கொன்றிருக்கிறார்கள்!
அது எப்படி முடியும்?
அது அரக்கனால் மட்டும்தான் முடியும்!
திடீரென்று இடிமுழக்கம் போல் சத்தம் கேட்டு அவர்கள் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார்கள்.
அவர்கள் முன் அரக்கன் தோன்றினன்.
முட்டாள்களே! இது என் இடம்! இங்கே என் அனுமதி இல்லாமல் எப்படி வந்தீர்கள்?
அரக்கனைப் பார்த்ததும் அவர்கள் வெலவெலத்துப் போனார்கள்.

உடனே அவர்கள் அரக்கனை நோக்கி ஈட்டியை எறிந்தார்கள்.
சர்...சர்...
ம்... இவனைக் கொல்லுங்கள்!
!!
படார்...!
அவர்கள் வீசிய ஈட்டிகள் எல்லாம் அரக்கன் மீது பட்டு முறிந்து போயின.
அதைப் பார்த்ததும் முஸ்தபாவைத் தவிர மற்றவர்கள் ஓட்டம் பிடித்தார்கள்.
ஓடாதீர்கள்! நில்லுங்கள்!
உடனே அவர்கள் தலைவரிடம் வந்து விசயத்தைச் சொன்னார்கள்.
தந்தையே! நாங்கள் அந்த அரக்கனைப் பார்த்தோம்!
ஈட்டிகளை வீசினால் எல்லாம் முறிந்து போகின்றன!
அவன் ஒரு சிங்கத்தை நசுக்கி கொன்று போட்டிருக்கிறான்!
தலைவரே! நம் கிராமத்துக்கு வெளியே அரக்கன் வந்திருக்கிறான்!

கிராமத்துக்கு வெளியே அரக்கன் ஆவேசத்துடன் நின்றுக்கொண்டிருந்தான்.
ஓகான் கிராமத்து மக்களே எனக்கு பணம், தங்கம், உணவு மது கொடுங்கள். இல்லை உங்கள் கிராமத்தை தரைமட்டமாக்கி விடுவேன்!
நான் கேட்டதை கொடுத்துவிடுங்கள். இல்லாவிட்டால் உங்கள் கிராமத்து மதில்சுவரை முதலில் அடித்து நொறுக்கிவிடுவேன்!
பிறகு சிங்கம் புலிகள் எல்லாம் கிராமத்துக்குள் புகுந்து உங்களை கடித்துத் தின்றுவிடும்!
திடீரென்று அரக்கன் தோளில் குள்ளன் தோன்றினான்.
ஆ... குள்ளன்!
அவனைப் பார்த்ததும் கிராமத்தவர்கள் வாயைப் பிளந்தார்கள்.
ஏய்...! அரக்கன் கேட்டதை கொடுத்து விடுங்கள். இல்லை மதில்சுவரை அடித்து நொறுக்கிவிடுவான்!

அய்யோ! மதில்சுவரை நொறுக்கிவிடாதே! பிறகு காட்டுமிருகங்கள் எல்லாம் கிராமத்துக்குள் புகுந்துவிடும்!
அவன் எப்படி மதில்சுவரை நொறுக்குகிறான் என்று பார்த்துவிடுவோம்!
உடனே அரக்கனும் குள்ளனும் குசுகுசு வென்று ஏதோ பேசிக்கொண் டார்கள்.
அரக்கன் இப்போது கிராமத்து பெண்களையும் குழந்தைகளையும் தூங்கிச் செல்லப போகிறான்! உங்களில் பலசாலி அவர்களை மீட்டுக்கொள்ளலாம்!
அரக்கன் சவால்விடுகிறானே! அவனுடன் மோதி சாக வேண்டியதுதான்!
நான் அவனுடன் மோதத் தயார்!
நம்மில் பலசாலி முஸ்தபாதான்!

உடனே முஸ்தபா புறப்பட்டான்.
மகனே முஸ்தபா! நில்!
?
ஏன் தந்தையே?
வேண்டாம் மகனே! பேசாமல் அவன் கேட்பதை கொடுத்து விடுவோம்!
உடனே தலைவர் அரக்கன் கேட்டதை மூட்டையாக கட்டிக் கொடுத்தார்.
இன்று நமக்கு நல்ல வேட்டை! இதைப் போல இன்னும் நிறைய கிராமங்கள் இருக்கின்றன!
தந்தையே! பணம், நகைகளை எல்லாம் ஏன் கொடுத்தீர்கள் அவனிடம் மோதிப் பார்த்திருக்கலாம் அல்லவா?
மகனே! எனக்கு இருப்பது நீ ஒருவன்தான்! அவனிடம் மோதி உன்னையும் இழக்கத் தயார் இல்லை!

மறுநாள் முஸ்தபா அடர்ந்த காட்டுக்கு வந்தான்.
நான் ஓகான் கிராமத்தில் இருந்து வருகிறேன்! மாயாவியை பார்க்க வேண்டும்!
மாயாவி இங்கு இல்லையே... ஈடன்தீவுக்குச் சென்று இருக்கிறார்!
உடனே முஸ்தபா ஈடன்தீவை நோக்கி விரைந்தான்.
மாயாவி அப்பொழுதான் ஈடன்தீவின் கரையை அடைந்திருந்தார்.
ரெக்சு! ஈடன்தீவுக்கு வந்துவிட்டோம்!
மாயாவிக்குச் சொந்தமான ஈடன் தீவில் எல்லாவகை மிருகங்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.

மாயாவி மிதவையில் ஆற்றைக் கடந்தார்.
ரெக்சு! மிருகங்கள் நம் வருகைக்காக காத்திருக் கின்றன!
ஆமாம் மாமா! அவைகளுடன் கும்மாளம் போடலாம்!
அப்போது முஸ்தபாவும் ஈடன்தீவை வந்தடைந்தான்
மாயாவி... மாயாவி...!
முஸ்தபா குரல் எழுப்பினான்.
மாயாவி...! மாயாவி...!
யாரது?
?
?
முஸ்தபா ஆற்றுக்குள் குதித்தான்.
நான்தான்
முஸ்தபா...?
அய்யோ! இந்த ஆறு முழுக்க நஞ்சு மீன்கள் இருக் கின்றதே!

முஸ்தபா அது தெரியாமல் ஆற்றுக்குள் குதித்து நீந்தி வந்தான்.
முஸ்தபா! இந்த கொம்பை பிடித்து மேலே வா!
முஸ்தபாவை நோக்கி நஞ்சு மீன்கள் வந்தன.
ஆற்றில் நஞ்சு மீன்கள் கிடக்கின்றன!
அதன் பிறகுதான் முஸ்தபா கொம்பைப் பிடித்து மிதவையில் ஏறினான்.
அப்பாடி...! ரொம்ப நன்றி மாயாவி!

உங்களைத் தேடி வந்த அவசரத்தில் ஆற்றுக்குள் குதித்து விட்டேன்!
நஞ்சு மீன்களிடம் இருந்து உன்னை காப்பாற்றியதே பெரிய விசயம்!
இரண்டு நாளாக ஓடிவந்ததினால் பயங்கரமாக மூச்சிரைக்கிறது!
முதலில் நன்றாக ஓய்வெடு! பிறகு வந்த செய்தியைச் சொல்!
மாயாவி மிதவையில் ஈடன்தீவை அடைந்தார்.
நம்மை வரவேற்க மிருகங்களும் காத்து நிற்கின்றன!
ஆமாம் ரெக்சு!
ரெக்சு இறங்கி ஓடிப்போய் சிங்கத்தையும், புலியையும் கட்டிப்பிடித்துக் கொண்டான்.
என்ன? எப்படி இருக்கிறீர்கள்?
என்ன பால்டி! ஈடன்தீவு பிடித்திருக்கிறதா?
?!
முஸ்தபா மிருகங்களைக் பார்த்ததில் வாயடைத்துப் போனான்.

முஸ்தபா! பயப்படாதே! இவைகள் எல்லாம் நம்முடைய நண்பர்கள்தான்!
மாயாவி! என்னால் இதை நம்ப முடிய வில்லையே?
சிங்கம புலி எல்லாம் நண்பர்களா?
ஆமாம் முஸ்தபா? சரி என்னை எதற்காக தேடிவந்தாய்?
கழுகு முனையில் இருக்கும் அரக்கனைப் பற்றிச் சொல்லவே இரண்டு நாளாக உங்களைத் தேடிவந்தேன்!
ரெக்சு சிங்கத்தின் மீது ஏறி சவாரி செய்தான்.
ரெக்சு குதிரையில் சவாரி செய்வது போல சிங்கத்தில் சவாரி செய்கிறானே?
ஆமாம்! அந்த அரக்கனை நீ பார்த்தாயா?

ஆமாம் மாயாவி! அரக்கன் எங்கள் கிராமத்திற்கு வந்து எங்களை சண்டைக்கு அழைத்தான்!
ஆனால், என் தந்தை அரக்கனுடன், சண்டையிட அனுமதி தரவில்லை!
அப்படியானால் அரக்கன் இருப்பது உண்மைதானா?
மற்றவர்கள் சொன்னதெல்லாம் உண்மைதான் போலிருக்கிறது!
ஆமாம்! நாங்கள் எல்லாம் நேரில் பார்த்திருக்கிறோமே?
அரக்கன் அந்த வழியாக வரும் வியாபாரிகளை மடக்கி வழிப்பறி செய்கிறான்!
அவனுடன் ஒரு குள்ளனும் இருக்கிறான்!
குள்ளனா?
ஆமாம் மாயாவி! அவன் இரண்டரை அடிதான் இருப்பான்!

அதனால் வியாபாரிகள் எங்கள் கிராமத்துப் பக்கம் வருவதில்லை!
அரக்கன் உங்களை எதுவும் தாக்கினானா?
இல்லை! என் தந்தையார் என்னை சந்தைக்குச் சென்று வியாபாரிகளை பழைய மாதிரி கிராமத்துப் பக்கம் வரச் சொல்லச் சொன்னார்!
நானும் போனேன்., பேசினேன். ஆனால் வியாபாரிகள் வர மறுத்துவிட்டார்கள்!
உங்களுக்கு தேவையான பாதுகாப்பு நாங்கள் தருகிறோம்!
இல்லை! இனி அந்தப் பக்கமே வரமாட்டோம்!
வியாபாரிகள்தான் கையில் துப்பாக்கி வைத்திருப்பார்களே? பாதுகாப்புக்கு துப்பாக்கியை பயன்படுத்த வில்லையா?
அவர்கள் அரக்கனை சுட்டார்களாம்! ஆனால் துப்பாக்கி குண்டுகள் அரக்கனை ஒன்றும் செய்ய வில்லையாம்?
டுமீல்..

நானும் எங்கள் ஆட்களுடன் அரக்கனை சந்திக்க கழுகு முனைக்குச் சென்றேன்.
அங்கே ஒரு சிங்கம் செத்துக் கிடந்தது!
அவன்தான் சிங்கத்தை நசுக்கிக் கொன்றிருக்கிறான்!
அரக்கன் எங்களைப் பார்த்ததும் தாக்க வந்தான். நாங்கள் ஈட்டிகளை எறிந்தோம். ஆனால் ஈட்டிகள் எல்லாம் அவன் மீது பட்டு முறிந்துவிட்டன!
முட்டாள்களே...!
சர்...சர்...!
அந்த அரக்கனை திரும்பவும் பார்த்தீர்களா?
நேற்று அவனே எங்கள் கிராமத்துக்கு வந்தான். வந்தவன் நகை பணம் உணவுப் பொருட்களை கொடுக்காவிட்டால் மதில் சுவரை அடித்து நொறுக்கிவிடுவேன் என்று மிரட்டினான்!

ex Sampath Tirupi

அதற்காகச் சொல்லவில்லை? நீ பெரிய பலசாலியாச்சே...!
என்ன செய்வது? என் கையை கட்டிப் போட்டுவிட்டார்களே!
மாயாவி: இதற்கு என்னதான் முடிவு?
நானே நேரில் சென்று அரக்கனை சந்திக்கிறேன்!
வா ரெக்ஸ்! திரும்பிப் போகலாம்!
ஈடன் தீவில் ஒரு வாரம் தங்கலாம் என்று சொன்னீர்களே மாமா?
முஸ்தபா! நீ டெவிலை அழைத்துக்கொண்டு மிதவையில் செல்!
நானும் மாமாவும் இரும்புக் கம்பி வழியாக அக்கரைக்கு வந்து விடுகிறோம்!
மிதவை புறப்பட்டது. உடனே மாயாவி ரெக்சை முதுகில் ஏற்றிக் கொண்டு கம்பி வழியாக சறுக்கினார்
ரெக்சு! இறுக்கிப் பிடித்துக்கொள்!
ஆ...ஆ...!

ஆ....ஆ....!
மாயாவியும் ரெக்சும் அக்கரையை அடைந்தார்கள்.
ஈடன் தீவைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று எல்லாவற்றையும் நேரில் பார்க்கிறேன்!
பாட்லி! நாங்கள் வரட்டுமா?
அடுத்த முறை வரும்பொழுதுகூட இரண்டு நாள் இருக்கிறோம்!
மாமா! இப்பொழுது எங்கே போகிறீர்கள்?
கழுகு முனைக்கு போகிறேன்!
மாமா! நானும் உங்களுடன் வரட்டுமா?
வேண்டாம் ரெக்சு!

மாயாவி மண்டை ஓட்டுக் குகைக்கு வந்தார்.
மாமா! நானும் உங்களுடன் வந்து, அந்த அரக்கனை பார்க்கிறேன் மாமா!
இல்லை ரெக்சு! அது ஆபத்து. நீ இங்கேயே இரு. நான் உடனே திரும்பிவிடுவேன்!
மாயாவி! உண்மையிலேயே அரக்கனை சந்திக்கப் போகிறீர்களா?
ஆமாம் குரான்!
நாங்கள் வேண்டுமானால் வரட்டுமா?
இல்லை குரான்! நான் வேகமாக போகவேண்டி இருக்கிறது!
நீங்கள் முன்னே சென்று அரக்கனை ஒரு கை பாருங்கள்!

சரி! நீ விரைவாக வந்து சேர்!
கண்டிப்பாக வருகிறேன்!
மாயாவி முன்னே குதிரையில் சென்றதும், முஸ்தபா பின்னே சென்றான்.
மாயாவி கழுகு முனையை நோக்கி குதிரையை விரட்டிக் கொண்டிருந்தார்.
அரக்கன் கூட குள்ளன் ஒருவன்! பேச்சு இடிமுழக்கம் போல் இருக்கிறதாம்?
துப்பாக்கிக் குண்டுகள், ஈட்டிகள் அவனை ஒன்றும் செய்வதில்லையாம்? அவ்வளவு கடினமானவனா?
மாயாவி கழுகு முனைக்கு வந்து சேர்ந்தார்.
இவன்தான் மாயாவி! இவனுக்கு சாவே இல்லை! ரொம்ப நாளாக சந்திக்க வேண்டும் என்றாயே!
அரக்கனும் குள்ளனும் மேலே இருந்து மாயாவியை நோட்டமிட்டாாகள்.

மாயாவி இறந்த சிங்கத்தைப் பார்த்தார்.
இந்த சிங்கத்தை எப்படி நசுக்கிக் கொல்ல முடியும்!
மாயாவி பெருங்குரலெடுத்துக் கத்தினார்.
ஏய்...! யாரடா அரக்கன்! வெளியே வா!
இதோ! நான் இங்கு இருக்கிறேன்!
திடீரென்று அரக்கன் மாயாவியின் முன் தோன்றினான்.
உடனே மாயாவி கையில் துப்பாக்கியை எடுத்தார்.
ஏய்! மரியாதையாக துப்பாக்கியை கீழே போடு. இல்லை பூச்சியை நசுக்குவது போல நசுக்கி கொன்று விடுவேன்!
துப்பாக்கியை கீழே போட முடியாது.

உடனே மாயாவி அவனை சுட்டார்
உன்னைப் பற்றி நிறைய கேள்விப்பட்டேன். அதெல்லாம் உண்மையா என்று தெரிய வேண்டும்!
டுமீல்...! டுமீல்...!
முட்டாள்! நீதான் சாகப் போகிறாய்!
இது என் இடம்! இது மட்டுமல்ல, இந்த காடே எனக்குத்தான் சொந்தம்!
நீ உயிரோடு இருநதால்தானே சொந்தம் கொண்டாட முடியும்! இங்கிருக்கும் ஒரு பாறையைக் கூட உன்னால் சொந்தம் கொண்டாட முடியாது!
திடீரென்று குள்ளன் அரக்கனின் தோளில் தோன்றினான்.
ஏய்...! அனாவசியமாக பேச்சு வேண்டாம்! முதலில் அவன் கதையை முடி!
என் கதையை முடிக்கப் போகிறாயா?

மாயாவி! மரியாதையாக சரணடைந்துவிடு! இல்லை கொன்று விடுவேன்!
இதுவரை நான் யாரிடமும் சரணடைந்த தில்லை!
உடனே குள்ளன் அரக்கன் தோளில் இருந்து கீழே இறங்கினான்.
மாயாவி! எங்களை சாதாரணமாக எடை போட்டுவிடாதே!
மரியாதையாக நாங்கள் சொல்வதைக் கேள்! இல்லை. உடம்பில் உயிர் இருக்காது!
அதற்கு வேறு ஆளைப் பார்! எல்லாவற்றுக்கும் இவன்தான் பேசுகிறான்!
ஏய்! உன் துப்பாக்கி குண்டுகள் எங்களை ஒன்றும் செய்யப் போவதில்லை!

அப்படியா அதையும் பார்த்துவிடுவோம்!
!!
ஆ...! அட...!
டுமீல்...!
மாயாவி அவர்களின் கையை நோக்கிச் சுட்டார். அவர்களிடமிருந்த துப்பாக்கியும் ஆயுதமும் தெறித்து விழுந்தன.
உடனே குண்டு பட்டதும் அரக்கனும் குள்ளனும் ஓடமுயன்றார்கள்.
நில்லுங்கள்! இனி துப்பாக்கி வேண்டாம். வெறுங்கையோடு மோதலாம்!
ஏய்... ஓடு! ஓடு!
ஓடாதே! வா ஆயுதம் இல்லாமல் மோதிப் பார்த்துவிடுமோம்!
அரக்கன் மாயாவியை ஒரு மாதிரியாக பார்த்தான்.
அரக்கன் திடீரென்று ஓட்டம் பிடித்தான்.
ஓடாதே.... நில்!

ஏய்...! ஓடாதே! சொன்னால் கேளு!
மாயாவி அரக்கன் கையில் வைத்திருந்த ஆயுதத்தை எடுத்துப் பார்த்தார்.
அடப் பாவிகள் பறவைகளின் இறகுகளால் செய்த தடியை கையில் வைத்துக்கொண்டு ஆட்டம் போடுகிறீர்களா?
இவன் சிங்கத்தை நசுக்கிக் கொல்வதா? கொசுவை கொல்லக்கூட இவனால் முடியாது!
உன் இரகசியம் அம்பலமாகி விட்டது!
ஹா...ஹா...!
மாயாவி விழுந்து விழுந்து சிரித்தார்.
உண்மை வெளியானதும் அரக்கனும் குள்ளனும் தலைதெறிக்க ஓடினார்கள்.
ஏய்... நில்லுங்கள்!

உடனே மாயாவி பாய்ந்து வந்து அரக்கனைப் பிடித்தார்.
இல்லை! என்னை விட்டுவிடு!
உன் சத்தம் இடிமுழக்கம் போல இல்லையே? அது எப்படி?
எப்படி இடிமுழக்கம் போல சத்தம் வந்தது!
ஆ...!
மாயாவி அரக்கனின் காலை வாரிவிட்டார்.
மாயாவி அரக்கன் மீது ஏறி அமர்ந்து கொண்டார்.
?
ஏய்...! அவனை விடு!
ஆ...! என்னை விட்டுவிடு!
குள்ளன் மாயாவியின் கையைப் பிடித்து இழுத்தான்.
உடனே மாயாவி அரக்கனை விட்டுவிட்டு குள்ளன் சட்டையைப் பிடித்து அலேக்காக தூக்கினார்.
அய்யோ! வசமாக மாட்டிக் கொண்டோமே?
ஏய்... மரியாதையாக விட்டுவிடு!
ஒரு குத்துக்கு தாங்க மாட்டாய்...?

மாயாவி! தயவு செய்து எங்களை விட்டுவிடு நாங்கள் ஓடிப்போய் விடுகிறோம்!
ஆமாம்! எங்களை விட்டுவிடு!
வாயை மூடுங்கள்!
ஏய்! உன் முகமூடியை கழட்டு. நீ யார் என்று பார்க்க வேண்டும்!
ஏய்...! முகமூடியை கழற்றாதே! வேண்டாம்! வேண்டாம்!
ஒரு கோழை அரக்கனைப் போல வேடம் போட்டு வழிப்பறி செய் கிறாயா?
நான் கோழை இல்லை!
ஆமாம் அவன் ஒரு குழந்தைதான்!

ஜோ! உனக்கு அடிபட்டதா?
ரூடால்ப்! அவன் என்னை கீழே தள்ளி விட்டதில் என் கை போச்சு!
ஓகோ! இருவரும் உறவினர்கள் போலிருக்கிறது!
கவலைப்படாதே ஜோ! எல்லாம் சரியாகி விடும்!
இப்பொழுது என்ன செய்வது?
எனக்கு சில உண்மைகள் தெரிய வேண்டும்!
இந்த இறகு கைத்தடியை வைத்து வியாபாரிகளை ஏமாற்றி வழிப்பறி செய்திருக் கிறீர்களே!
ஆமாம் மாயாவி! எங்கள் செயல் அனைத்தும் வேடிக்கை யாகத்தான் இருக்கும்!

கொள்ளையடித்த பொருட்களை எங்கே பதுக்கி வைத்திருக் கிறீர்கள்?
கொள்ளையடித்த பொருட்களா?
என்னிடம் இருந்து தப்பிவிடலாம் என்று நினைக் காதீர்கள்! விட மாட்டேன்!
ஆ...! என் கை....!
ரூடால்ப்! என் கை. போச்சு! கொள்ளையடித்தவை குகையில் இருக்கிறது என்று சொல்ல வேண்டியது தானே?
முட்டாள்!
ரூடால்ப் மாயாவியை குகைக்கு அழைத்துச் சென்றான்.
ரூடால்ப்! அனைத்தையும் காட்டி விடவா?
ரஸ்கல்! நீயே நம்மை காட்டிக் கொடுத்து விடுவாய் போலிருக் கிறது!

இந்த சிங்கத்தை
எப்படி கொன்றீர்கள்?
கண்டிப்பாக இந்த இறகு
தடியினால் சிங்கத்தை
கொல்ல
முடியாது!
நாம் சிங்கத்தை
கொன்றதை எப்படிச்
சொல்ல முடியும்!
இப்பொழுது
என்ன
செய்வது?
இடிமுழக்கம்
போல சத்தம் எப்படி வருகிறது.
அதையும் சொல்லவேண்டும்!
நாங்கள் எதையும்
சொல்லத் தயாராக இல்லை!
என்ன செய்வாய்?
உடனே மாயாவி குள்ளனைப்
பிடித்துத் தூக்கினார்.
நான் கேட்கிற கேள்விகளுக்கு
பதில் சொல்லவிட்டால் என் கை
வரிசையை காட்டவேண்டியது
வரும்!
ஆ...!
என்னை
இறக்கிவிடு!

இவனுடைய குரல் சாதாரண மாகத்தானே இருக்கிறது. பிறகு எப்படி இடிமுழக்கம் போல் சத்தம் வருகிறது!
வேண்டாம் சொல்லி விடாதீர்கள்!
உடனே மாயாவிஜோவின் காலை மித்தார்.
ஜோ! கொஞ்சம் அமைதி யாக இரு!
ஆ...! என் கால்.. கால்...!
உண்மையை சொல்கிறீர்களா? இல்லை அடுத்த காலையும் மிதித்து விடுவேன்!
ரூடால்ப்! சொல்லிவிடு!
இடிமுழக்கம் சத்தம் வருவது எப்புடி என்று சொல்லி விடு கிறேன்!
உடனே ரூடால்ப் மரத்தின் மீது ஏறினான்.
நான் யாருக்கும் தெரியாமல் இந்த மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொள்வேன்!

மரத்தில் இருந்த குள்ளன் ஒலிபெருக்கியை கையில் எடுத்து பேசினான்.
இது என்னுடைய இடம். இங்கு நான்தான் ராஜா!
ஓகே! ஒலி பெருக்கி மூலமாகத்தான் பேசுகிறீர்களா?
மரியாதைக பொருட்களை கொடுங்கள். இல்லை உயிரை விட வேண்டியது வரும்!
ரஸ்கல் ஆள் குள்ளனாக இருந்து கொண்டு பெரிய பெரிய காரியம் எல்லாம் செய்கிறாய்! கீழே இறங்கி வா!
இந்த இறகு தடியைவைத்து ஒரு பறவையைக்கூட சொல்ல முடியாது! பிறகு எப்படி சிங்கத்தை கொன்றீர்கள்?
படார்
ஆ...!என்னை அடிக்காதே!
சொல்கிறாயா? இல்லை அடுத்த காலை பதம் பார்க்கட்டுமா?
ரூடால்ப்! நீயே சொல்லிவிடு!
மாயாவி! அவனை அடிக்காதே! சொல்லி விடுகிறேன்!

Tex Sampath Tirupur

அது இருக்கட்டும்! துப்பாக்கிக் குண்டுகளும், ஈட்டிகளும் உங்களை தாக்குவதில்லையே எப்படி?
எங்கள் இரகசியங்கள் ஒவ்வொன்றாக தெரிந்து கொள்ள நினைக்கிறாயா?
அரக்கன் மீது ஏவப்பட்ட ஈட்டிகள் எல்லாம் உடம்பில் பட்டு முறிந்து விடுகின்றன. துப்பாக்கி குண்டுகள் தெறித்து விடுகின்றன.
எங்களுடைய இரகசியத்தை இனி ஒன்றுகூட சொல்லப் போவதில்லை!
ஏய்...! மரியாதையாக சொல்லிவிடுங்கள். இல்லை உங்கள் இருவரையும் பாதாளத்துக்குள் தூக்கி வீசி விடுவேன்!

குள்ளன் ரூடால்ப் தன் இரகசியங்களை சொன்னான். சிங்கத்தை கொன்றதையும். இடிமுழக்கம் போல சத்தம வருவதையும் கூறினான்.
அரக்கன் மீது ஏவப்பட்ட ஈட்டிகள் முறிந்து போவதற்கு காரணமான கடினமான தோல் கவச உடையைப்பற்றிய இரகசியத்தைச் சொன்னான்.
மாயாவி! எங்களுடைய எல்லா இரகசியத்தையும் சொல்லிவிட்டேன்!
எங்களுடைய இரகசியம் இதுவரை வேறு யாருக்கும் தெரிந்தது இல்லை. இப்போது மூன்றாவதாக உங்களுக்குக் தெரிகிறது!
"என் அப்பா தோல் பதப்படுத்து பவர் நான் குள்ளனாக இருப்பதால் அவர் என்னை வெறுத்து ஒதுக்கி அறையை சுத்தப்படுத்துகிற வேலையை எனக்கு கொடுத்தார்."

"ஒருநாள்– தோல் பதப்படுத்து வதற்கான தொட்டியில் அளவுக்கு அதிகமான இரசாயனப் பொருளை கலந்து வைத்து விட்டேன்"
டேய் ராஸ்கல்! இதில் என்ன கலந்தாய். தோலை வெட்டக் கூட முடியவில்லையே?
முட்டாள்! என் பிழைப்பை கெடுக்க வந்த பாவி! இனி என் கண்முன்னால் நிற்காதே! எங்காவது போய்த் தொலை!
குள்ளனின் அப்பா அவனை அடித்து விரட்டினார்.
ஆமாம்! அப்பா சொன்னது மாதிரியே தோல் கடினமாகி விட்டது வெட்டக்கூட முடியவில்லை!
அந்த தோல் இரும்பைப்போல கெட்டியாகி விட்டது! புதிய பொருள ஒன்றை கண்டு பிடித்த திருப்தி எனக்கு இருந்தது!

அதை என் அப்பாவிடம் எடுத்துச் சொன்னேன்!
முட்டாள்! நீ இன்னுமா இங்கே இருக்கிறாய் ஓடுடா...!
''உடனே நான் மூட்டை முடிச்சுகளுடன் வீட்டைவிட்டு என் சகோதரனின் பண்ணைக்கு புறப்பட்டேன்.''
ஜோ எனக்கு நெருங்கிய உறவினர் அவன் ஒரு முலையில் அமர்ந்து அழுதுகொண்டிருந்தான்.
ஜோ! என்னாச்சு ஏன் அழுகுறாய்?
ஜோவை எனக்கு மிகவும் பிடிக்கும்! ஜோ அவன் பண்ணையில் வேலை செய்து வந்தான்.
''ஒருநாள் கால் தடுமாறி பாலை கொட்டி'விட்டான்.''
டேய்! தினமும் உன்னால் நிறைய பால் சேதாரமாகிறது! உன்னை...!

என்னைப்போல அவனையும் அடித்து விரட்டி விட்டார்கள்.
நீ சாப்பிடத்தான் லாயக்கு! வேலையில் மக்கு! எங்காவது போய்த் தொலை!
ஜோ! ஏன் அழுகிறாய்?
நான் பாலைக் கொட்டிவிட்டேன்! அதனால் என் அப்பா அடித்து விரட்டி விட்டார்!
எல்லாரும் என்னை அடிக்கிறார்கள். நான் எதற்குமே லாயக்கில்லாதவனாம்!
பண்ணை வேலைக்கு நீ வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டார்கள்!
ஜோ! பேசாமல் என்னுடன் வந்துவிடு! உன்னை நான் கவனித்துக் கொள்கிறேன்!
உடனே இருவரும் புறப்பட்டு வந்து விட்டோம்! நான் குள்ளன். அவனோ அரக்கனைப் போல் நெடு நெடுவென்று வளர்ந்திருந் தான்!

உடனே நாங்கள் இருவரும் வேலை தேடி அலைந்தோம்!
"ஒரு சர்க்கஸ் கம்பெனிக்கு சென்றோம்! வேலை கிடைத்தது!"
ஓ.கே! உங்கள் இருவரையும் நான் சேர்த்துக் கொள்கிறேன்!
டேய்! அவளை விடுடா!
இல்லை! இவளை நான் சிரிக்க வைக்கிறேன்!
ஏய்...! குழந்தையை விடு! அவள் உன்னைப் பார்த்து பயப்படுகிறாள்
கடைசியில் அந்த வேலையும் பறிபோனது. எங்கு- வேலை தேடிப் போனாலும் எங்களுக்கு ஏமாற்றம் தான் கிடைத்தது.
"ஆனால் எப்படியாவது சாப் பாட்டுக்கு வழியை கண்டுபிடித்து விடுவோம்."
ஜோ! சாப்பிடு!
ரூடால்ப் ரொம்ப நன்றி!

"நான் மாவிட்டானில் ஒரு தோல் கம்பெனியில் வேலைக் குச் சேர்ந்தேன். தோலை பதப்படுத்துவது என் வேலை!"
ஜோ தெருவில் சென்றால் சிறுவர் சிறுமிகள் எல்லாம் அவனை கல்லால் அடித்து விரட்டினார்கள். அதனால் ஜோ வெளியே செல்ல நடுங்கினான்.
ரூடால்ப்! என்னைக் காப்பாற்று! இவர்கள் என்னை கல்லால் அடிக்கிறார்கள்!
"அப்பொழுதுதான் எனக்கு பழைய நினைவு வந்தது. தோலை இரும்பைப்போல மாற்றும் முறை மனதில் தோன்றியது."
உடனே அதை நிறைவேற்றினேன். அந்த கடினமான தோலில் ஜோவுக்கு கவச உடை செய்து கொடுத்தேன்
ஆகா! இப்பொழுது எனக்கு கவலை இல்லை! ஒரு கல்கூட என் மீது படவில்லை!

பிறகு ஜோவுக்கு விதவிதமான உடைகள் தயாராயின.
ரூடால்ப்! என்ன செய்யப் போகிறாய்?
ஜோ! அந்த முகமுடியை அணிந்துகொள்! சொல்கிறேன்!
ரூடால்ப் ஈட்டியை ஜோவின் மீது வீசினான்.
ஆகா....! நினைத்தது போலவே ஈட்டி முறிந்துவிட்டது!
அடுத்து ரூடால்ப் துப்பாக்கியை எடுத்து மரத்தைச் சுட்டான்.
ரூடால்ப்! உன் நடவடிக்கை எனக்கு புரியவில்லை!
துப்பாக்கி குண்டு இந்த உடையை துளைக்கிறதா என்று பார்க்க வேண்டும்!
பிறகு ஜோவை துப்பாக்கியால் சுட்டேன்!”
?!
ஆகா! இந்த உடையை குண்டுகூட துளைக்க வில்லை!
உடனே இருவரும் காட்டுக்குப் புறப் பட்டு வந்தோம்.
நாம் காட்டுக்கு— எதற்காக போகிறோம்!
நிறைய பணம் சம்பாதித்து பணக்காரன் ஆகவேண்டாமா?
“அதன் பிறகுதான் கழுகு முனையில் அரக்கன் தொழிலை தொடங்கினோம்!”

உங்கள் கதை கேட்க நன்றாக இருக்கிறது. ஆனால் பெரிய தவறு செய்திருக்கிறீர்கள்!
கொள்ளையடித்த பொருட்கள் எங்கே?
காட்டுகிறோம்! ஆனால் எங்களை தண்டனையில் இருந்து காப்பாற்றவேண்டும்!
ஆமாம்! அதுதான் சரி!
உடனே மாயாவியை குகைக்குள் அழைத்து வந்து பொருட்களை காட்டினார்கள்.
இதோ இதுதான் நாங்கள் கொள்ளையடித்து சம்பாதித்த நகை பணங்கள்!
சரி! அத்தனையையும் நீதி மன்றத்தில் ஒப்படைத்தால் உங்களுக்கு தண்டனை குறைய வாய்ப்பு உண்டு.
அதைக்கேட்டு குள்ளன் ஆத்திரப் பட்டு மாயாவியின் பின் தலையில் ஓங்கி அடித்தான்.
அப்படியா?
படார்...!
ஆ...!

மாயாவி அடியை வாங்கிக்கொண்டு சரிந்து விழுந்தார்.
ரூடால்ப்! என்ன இது?
ஜோ! பொருட்கள் அனைத்தையும் மூட்டையாக கட்டி வண்டியில் ஏற்று! ம்... விரைவாக நடக்கட்டும்!
இனி எங்கே போகப் போகிறோம்!
எங்காவது தலைமறைவாகி விடலாம்!
குகையில் மாயாவி மட்டும் மயங்கிக்கிடந்தார். அவரைத்தேடி டெவில் அங்கே வந்தது.

மாயாவி மெதுவாக கண் விழித்துப் பார்த்தார்.
ஆ... என் தலை வலிக்கிறதே!
வெளியே குதிரை ஹீரோவும் தயாராக இருந்தது.
அந்த பொடியன்! என்னை தாக்கிவிட்டு பொருட்களை வாரி சுருட்டிக்கொண்டு தப்பி விட்டானே?
அவர்கள் எங்கே போய் விடப் போகிறார்கள். அதையும் பார்த்து விடுவோம்!
உடனே மாயாவி குதிரையில் ஏறி விரட்டினார்.
குள்ளன் அதிக தூரம் போய் இருக்க முடியாது.
குள்ளன் வண்டியை வேகமாக ஓட்டினான். ஜோ கூடவே ஓடிவந்தான். மாயாவி அவர்களை பின் தொடர்ந்து வந்தார்.
ரூடால்ப்! அவன் வந்து விட்டான்!
பரவாயில்லை! வண்டியை நிறுத்தாமல் ஓட்டவேண்டியதுதான்!

மாயாவியும் விடாமல் அவர்களை விரட்டி வந்தார். குள்ளன் துப்பாக்கியால் மாயாவியை சுட்டான்.
ஏய்...! திரும்பிப் போய்விடு! இல்லை சுட்டுத் தள்ளி விடுவேன்!
மாயாவியும் சுட்டார். ரூடால்பின் துப்பாக்கி எகிறியது.
இருவரும் சேர்ந்து என்னை தாக்கிவிட்டு தப்பிக்க பார்க்கிறீர்கள்? முடியுமா?
உங்களை ஏமாற்ற யாராலும் முடியாது!
ரூடால்ப்! இனி என்ன நடக்கும்?
இருவரும் நீதி மன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.
உங்கள் இருவருக்கும் 5 ஆண்டு சிறை தண்டனை விதிக்கி றேன்!
உஷ்!
ரூடால்ப்! இதெல்லாம் நமக்கு தேவையா?
கொள்ளையடிக்கப்பட்ட பொருள் உரியவர்களிடம் திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
உங்கள் பொருள் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங் கள்!

ஐந்து ஆண்டு கழித்து இருவரும் வெளியே வந்தார்கள்.
ரூடால்ப்! பிழைக்க வேறு ஏதாவது வழி இருக்கிறதா?
யாராவது உதவினால் புதிதாக தொழில் தொடங்கலாம்!
மாயாவி அவர்களுக்கு உதவி செய்தார்.
இருவருக்கும் தோல்வியாபாரம் செய்ய உதவினார்.
GA LEATHER
GH AS STEEL!
நாங்கள் இந்த தொழிலில் எப்படியும் முன்னுக்கு வந்து விடுவோம்!
ஆமாம் மாயாவி! மிக்க நன்றி
உங்கள் உதவியை என்றைக்கும் மறக்க மாட்டோம். தவறு செய்தவர்கள் திருந்த உங்களை மாதிரி அனைவரும் உதவி செய்தால் நாட்டில் திருட்டே இருக்காது!
கடினமாக உழைத்து முன்னேறுங்கள்!
நான் கண்டுபிடித்த தோல் உடையை உலக நாடுகளுக்கு அறிமுகப் படுத்தப் போகிறேன்.
வாழ்த்துக்கள்!
ரூடால்ப்! மாயாவி உண்மையிலேயே இரக்க குணம் உள்ளவர்தான்!
ஆமாம்! அவர் பெருமைகளை சொல்லிக் கொண்டே போகலாம்!
(முடிந்தது)

அடுத்த காமிக்ஸ்

கோடைமலர்!

லேடி ஜேம்ஸ்பாண்டு
மாடஸ்தி
தோன்றும்

கொலைமிரட்டல்

விறுவிறுப்பான மர்மப் படக்கதை!
படிக்கத் தவறாதீர்கள்!

அதிக பக்கங்கள்! ஆனால் அதே விலை

மே 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணிகாமிக்ஸ்", சென்னை-600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக

32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

Registered as Newspaper in Sri Lanka

வேற வீடு மாத்திப் போனப்போ...

அந்த பில்டிங்குல
எல்லா குழந்தைங்களுட
ஆயிரத்தெட்டு கும்மாளம்
அடிச்சிட்டிருந்தாங்க...
என்னை யாரும் கண்டுக்கல!
எப்படி இவங்கள
ஃப்ரெண்ட்ஸ்
ஆக்கிக்கறது...ம்? ஆங், ஐடியா!
ஒரு ட்ரை-மீ சாப்பிட்டேன்... டக்டக்குனு
நேரா போயி அவங்களுக்கும்
கொடுத்தேன் கைநிறைய ட்ரை-மீ....
"ம், வாங்க, ட்ரை மீ!" அவ்ளோதான்! ஒரே
நாள்ள அஞ்சு பேரு
என் ஃப்ரெண்ட்ஸ்
ஆயிட்டாங்க.

HTA-8507

Parry's

Try-Me!

சவால் விடும் புதுச்சுவை